www.Padasalai.Net

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.6078/ஆ1/08 நாள் 09.08.2008

---

பொருள் : மேல்நிலைக் கல்வி – மோரூர், அரசு மேல்நிலைப் பள்ளி, உதவி தலைமை ஆசிரியர் நியமிப்பது – தெளிவுரை வழங்குதல் குறித்து.

பார்வை :
1. அரசு ஆணை எண்.1802 பள்ளிக் கல்வித் துறை நாள் 17.11.1984
2. அரசு ஆணை எண்.1312 அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் துறை நாள் 22.06.1982
3. அரசு ஆணை எண்.898 பள்ளிக் கல்வித் துறை நாள் 26.05.1988
4. சென்னை –06, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 69439/டபிள்யு6/டபிள்யு2/2000 நாள் 28.07.2000
5. அரசு ஆணை எண்.469 பள்ளிக் கல்வித் துறை நாள்25.03.1988
6. மோரூர், அரசு மேல்நிலைப் பள்ளி, தலைமை ஆசிரியர் கடிதம் எண்.72/08 நாள் 25.07.2008

---

பார்வை 6ல் காணும் கடிதத்தில் மோரூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் 824 மாணவ / மாணவியர்கள் பயின்று வருவதாகவும், இதுவரை இப்பள்ளியில் உதவி தலைமை ஆசிரியர் யாரையும் நியமிக்கப்படவில்லை என்றும் உதவி தலைமை ஆசிரியர் நியமிக்க தெளிவுரை கோரியும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 1 முதல் 5 முடிய உள்ள அரசாணைகள் மற்றும் இயக்குநரின் செயல்முறைகளின்படி 750 மாணவ / மாணவிகள் பயிலும் பள்ளிக்கு கீழ்காணும் வகையில் உதவி தலைமை ஆசிரியர் நியமிக்கலாம்.

ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் முதல் தேதியில் உள்ள மாணவர் சேர்க்கை எண்ணிக்கை 750க்கு குறையாமல் இருக்க வேண்டும்.

| பிரிவு | உதவி தலைமை ஆசிரியர் எண்ணிக்கை | யாரை நியமிக்கலாம் |
|---|---|---|
| மேல்நிலைக் கல்வி பிரிவு | 1 | முதுகலையாசிரியர்<br>உடற்கல்வி இயக்குநர் நிலை 1 நிலையில் |
| உயர்நிலைப் பிரிவு<br>9–10 வகுப்புகளுக்கு | 1 | உடற்கல்வி இயக்குநர் நிலை 2<br>பள்ளி உதவி ஆசிரியர் / தமிழாசிரியர் (இருமுனை பாட ஆசிரியர்) மற்றும் அவர்தம் நிலையில் ஊதிய விகிதம் பெறுபவர்கள் |
| 6–8 வகுப்புகள் | 1 | இடைநிலை ஆசிரியர் / சிறப்பாசிரியர் / உடற்கல்வி ஆசிரியர் மற்றும் அவர்தம் நிலையில் ஊதியம் பெறுவோர். |

சென்னை, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 113024/டபிள்யு2/78 நாள் 01.09.1979 ன்படி மேற்கண்டவாறு மூன்று நிலைகளில் பணிமூப்பின் அடிப்படையில் மூத்த ஆசிரியருக்கு உதவி தலைமையாசிரியர் பதவியினை தலைமையாசிரியரே நியமித்து ஆணையிடலாம். இதற்காக மாதந்தோறும் ரூ.50/– சிறப்பு ஊதியமாக வழங்கப்படவேண்டும்.

www.Padasalai.Net

மூத்த ஆசிரியர்கள் (தலைமை ஆசிரியர் பதவி உயர்வு துறந்திருந்தாலன்றி) உள்ள போது இளையவர்களை உதவி தலைமை ஆசிரியர்களாக நியமித்தல் கூடாது.

சென்னை, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.113024/டபிள்யு2/78 நாள் 09.06.1979ன்படி உதவி தலைமை ஆசிரியர் பதவி என்பது தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கு ஒரு உரிமையாக கோரமுடியாது.

மாணவர் எண்ணிக்கை 750க்கு குறைவாக காணப்படின் உதவித் தலைமையாசிரியர் பதவியில் உள்ளவர் தானாகவே அப்பதவியினை இழந்ததாக கருதி அவருக்கு வழங்கப்பட்ட சிறப்பு ஊதியம் நிறுத்தப்படவேண்டும்.

உதவி தலைமையாசிரியருக்கு ஒரு வாரத்திற்கு 10 மணி நேரம் பாட போதனைகள் மட்டும் வழங்கப்படவேண்டும். இதர பணி நேரத்தில் (Working Hours) தலைமையாசிரியரால் வழங்கப்படும் இதர பணிகளை கவனிக்க வேண்டும்.

பாடக் குறிப்புகள் மற்றும் உற்று நோக்கல் பணிகளை தலைமையாசிரியரே கவனிக்க வேண்டிய பணிகள் ஆகும்.

உதவி தலைமையாசிரியர் நியமன ஆணையின் நகல் சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**உதவி தலைமையாசிரியரின் பணிகள்**

1. கல்வி போதனை சம்பந்தப்பட்ட வேலைகளை மேல்நிலை வகுப்புகளை பொறுத்த மட்டில் முதுகலைப் பட்டதாரி உதவி தலைமையாசிரியரும், உயர்நிலைப் பள்ளி வகுப்புகளை பொறுத்த மட்டில் 9–10 வகுப்புக்கான உதவித் தலைமையாசிரியரும், 6–8 வகுப்புக்கான உதவித் தலைமையாசிரியரும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

2. இம்மூன்று உதவித் தலைமையாசிரியரும் தங்களது ஒத்துழைப்பினை தலைமையாசிரியருக்கு அளித்து பள்ளி முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு தலைமை ஆசிரியருக்கு உதவியாக செயல்பட வேண்டும்.

3. தலைமையாசிரியர் சிறு விடுப்பு, குறுகிய கால விடுப்பு, வேறு பணி, பணியிடை பயிற்சி போன்ற காரணங்களுக்காக பணியில் இல்லாத நேரங்களில் பொறுப்பு தலைமையாசிரியராக (முதுகலையாசிரியர் நிலையில் உள்ளவர்) உள்ள உதவித் தலைமையாசிரியர் செயல்பட வேண்டும்.

4. தலைமையாசிரியர் மாறுதலில் / பதவி உயர்வில் செல்லும் போதும் மூத்த முதுகலையாசிரியராக உள்ளவர் (மேல்நிலைப் பள்ளி பொருத்த மட்டில்) பொறுப்பு தலைமையாசிரியராக செயல்பட வேண்டும். உயர்நிலைப் பள்ளியை பொறுத்த மட்டில் பள்ளி உதவியாசிரியர் / தமிழாசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை 2 மற்றும் அவர்தம் நிலையில் உள்ளோர் உதவி தலைமை ஆசிரியராக உள்ளவர் பொறுப்பு தலைமையாசிரியராக செயல்படவேண்டும்.

www.Padasalai.Net

**5. தலைமை ஆசிரியரால் அளிக்கப்படும் இதர பணிகள்.**

சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ஒ.மு.எண்.1324/ஒய்வு/ஐ1/97 நாள் 13.01.1997ன்படி ஓய்வு பெற்ற பின்னரும் மறுநியமனத்தில் பணிபுரியும் உதவித் தலைமையாசிரியர்களுக்கு மறுநியமனக் காலத்திற்கும் சிறப்பூதியம், இடைக்கால நிவாரணம் வழங்கலாம்.

அரசு ஆணை எண்.1312 கல்வி மற்றும் தொழில் நுட்பம் நாள் 22.06.1982ன்படி 01.10.1998க்கு முன்னர் தலைமையாசிரியர் பதவி உயர்வு துறந்தவர்களையும் உதவித் தலைமையாசிரியர் பதவிக்கு நியமிக்கலாம்.

அரசு ஆணை எண்.731 கல்வித் துறை நா ள்28.04.1981ன்படி இதர மொழி ஆசிரியர்கள் உருது, இந்தி, கன்னடம், மலையாளம், போன்றவர்களையும் உதவி தலைமை ஆசிரியர்களாக நியமிக்கலாம். ஆனால் அவர்கள் இரண்டாம் மொழி தேர்வான நிர்வாக அலுவல் மொழியான ''தமிழ்'' தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

உதவித் தலைமையாசிரியர் நியமன ஆணை, தலைமையாசிரியரால் வழங்கப்பட்ட பின் அதில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அதனை சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட அறிவுரைகளை தவறாது கடைப்பிடிக்குமாறு அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்செயல்முறைகளை பெற்றுக் கொண்டமைக்கு ''ஒப்புகை'' அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
வேலூர்.

பெறுநர்
தலைமை ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி, மோசூர்

நகல் : அனைத்து வகை பள்ளிகள்
நகல் : மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் / திருப்பத்தூர்
நகல் : மண்டல உடற்கல்வி ஆய்வர், வேலூர்
நகல் : இவ்வலுவலக அனைத்து பிரிவுகள் கண்காணிப்பாளர்கள் / நேர்முக உதவியாளர்